Department of Education

GOVERNMENT OF WESTERN AUSTRALIA

# பிரத்யேக மாணவர் அடையாளங்காட்டி

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

பிரத்யேக மாணவர் அடையாளங்காட்டியைப் பெற (USI) ஒவ்வொருவரும் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி தகுதிகளை எடுத்திருக்க வேண்டுமென ஆஸ்திரேலிய அரசாங்கம் வலியுறுத்துகிறது. 2021 ஜனவரி 1 முதல் உயர்கல்வியைத் தொடங்கும் அனைத்து மாணவர்களுக்கும் இப்போது இது நீட்டிக்கப்படுகிறது. 2023-ல் அல்லது அதற்குப்பின் பட்டம்பெறும் மாணவர்கள் ஒரு விருதினைப் பெறுவதற்கும் இது கட்டாயமாகும்.

நீங்கள் பல்கலைக்கழகத்தில் இருந்தால், TAFE அல்லது வேறு தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை மேற்கொண்டால், உங்களுக்கு USI தேவை. நீங்கள் காமன்வெல்த் நிதியுதவியைப் பெற, உங்கள் கல்வித்தகுதி அல்லது சாதனை அறிக்கையைப் பெறுவதற்கு உங்களுக்கு இது தேவை.

இதில் பள்ளி மாணவர்கள் தங்கள் பள்ளி செயல்நிரலின் பகுதியாக அல்லது மூன்றாம்நிலை நிறுவனங்களின் சேவை மையம்[1] (TISC) வாயிலாக பல்கலைக்கழகத்தில் விண்ணப்பிப்பதற்கு ஒரு தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) தகுதியில் சேருவதும் இதில் அடங்கும்.

### USI என்றால் என்ன?

USI என்பது ஆஸ்திரேலிய அரசாங்கத்தால் 2015 முதல் வழங்கப்படும் பத்து எழுத்துருக்களைக் கொண்ட எண்ணெழுத்துக் குறிப்பு எண். USI வாழ்நாள் முழுவதும் ஒருவருடன் இருக்கக்கூடியது. ஒருவர் தனது சாதனைப் பதிவுகளை அவர்கள் கட்டுக்கடுத்தக்கூடிய கணக்கு வாயிலாக ஆன்லைனில் அணுக உதவுகிறது. USI-ஐ இலவசமாகப் பெறலாம். இதை அமைக்க 5 நிமிடங்களே ஆகும். எந்த நேரத்திலும் USI கணக்கினை ஆன்லைனில் அணுகலாம். USI குறித்த விபரங்களை பிற மொழிகளில்[2] நீங்கள் காணலாம்.

1 https://www.tisc.edu.au/static/guide/applying-online.tisc
2 https://www.usi.gov.au/languages

D23/0257171
February 2023

CC BY
Exclusions may apply

## ஒரு USI-ஐ ஒரு மாணவர் எப்படி உருவாக்குவது?

1. விண்ணப்பத்தைத் தொடங்கும் முன்பாக மாணவர்களிடம் பின்வரும் இருவகை அடையாளப் படிவங்கள் தேவை:
   - ஓட்டுநர் உரிமம்
   - மெடிகேர் அட்டை
   - ஆஸ்திரேலியக் கடவுச்சீட்டு
   - சர்வதேச மாணவர்களுக்கு - விசா (ஆஸ்திரேலியர் அல்லாதோருக்கான கடவுச்சீட்டுடன்)
   - ஆஸ்திரேலியப் பிறப்புச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ் விபரக்குறிப்புகள் போதுமானதல்ல என்பதை கவனத்தில் கொள்ளவும்
   - வம்சாவளியின் பதிவுச்சான்றிதழ்
   - குடியுரிமைச் சான்றிதழ்
   - ImmiCard

   பயன்படுத்தும் அடையாள அட்டை வடிவத்தில் காட்டப்பட்டுள்ளவற்றுடன் உள்ளிடப்பட்ட விபரங்கள் பொருந்தவேண்டும். கூடுதல் விபரங்களுக்கு USI இணையதளம்[3] வருகை தாருங்கள்.
2. மாணவரின் மின்னஞ்சல் முகவரி போன்ற தனிப்பட்ட தொடர்பு விபரங்கள் தயாராக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
3. USI இணையதளம்[4] சென்று ‘Click here to Get your USI' பொத்தானைச் சொடுக்கி படிகளைப் பின்பற்றுங்கள்.
4. ஒரு மாணவர் VET கல்வித்தகுதியை மேற்கொள்கிறார் எனில், மாணவரின் பள்ளியில் USI அளிக்கப்படவேண்டும்.

3 http://www.usi.gov.au/help-centre/proof-of-ID/Pages/proof-of-ID.aspx
4 https://www.usi.gov.au/students/get-a-usi